நிலை பெறுகிறார் என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு பி. டி. பட்டத்திற்காக இரண்டு இன்கிரிமெண்டுகள் என்ற முறையில் வழங்கப்படுகிறது.

THIRU K. S. GANAPATHI again rose....

MR. CHAIRMAN : The time is too short. Too many supplementaries should not be put. We will have to wind up our business today at about 5-30 p. m. I would, therefore, request all the members to cut short their speeches, since there are eight or nine speakers listed for today.

Teachers Serving in Private Tamil Colleges.

* 289 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Memorandum has been received requesting to bring the scales of pay of teachers serving in private Tamil Colleges on a par with those of Arts College Teachers ; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

தனித் தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனித் தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியத்தை கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதிய அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கலைக்கல்லூரிகளில் உள்ளதைவிட தமிழ்க் கல்லூரிகளில் வேலைப் பளு குறைவாக இருப்பதாலும் பல்கலைக்கழக மானியக் குழுவின் பொறுப் பின்கீழ் தமிழ்க் கல்லூரிகள் வராததாலும், மேற்சொன்ன கோரிக்கையை நிறைவேற்ற வழியில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளியில் பணி செய்யும் தமிழ் ஆசிரியர்களுக்கும் கலைக் கல்லூரியில் பணி செய்யும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கல்வித் தகுதியில் வேறுபாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உயர்நிலைப் பள்ளியில் பணி செய்யும் தமிழ் ஆசிரியர்களுக்கும் தமிழ் கல்லூரியில் பணி செய்யும் தமிழ் ஆசிரியர்களுக்கும் வேறுபாடு இல்லை. புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 275—10—375—15—450 என்று இருந்தது. இப்போது பி. டி. ஆசிரியர்களுக்கெல்லாம் ரூ. 275 என்பதை ரூ. 300 ஆக்கியதிலிருந்து அவர்களுக்கும் அதே அளவிலே ரூ. 275 என்பதை ரூ. 300 ஆக்கி, அதே விகிதத்திலே சம்பளம் நிர்ணயிக்க வேண்டும்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, கலைக்கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களைப் போல் தமிழ்க் கல்லூரிகளிலேயும் அதே தகுதியோடு பணியாற்றுகிற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். புலவர்களே கலைக்கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களாகவும் இருக்கிறார்கள். அதேபோல, எம். ஏ. படித்தவர்களும் தமிழ்க் கல்லூரிகளில் பேராசிரியர்களாக இருக்கிறார்கள். இந்த முறையில் ஆலோசித்து அரசு, தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் ஊதியத்தை உயர்த்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மற்ற கல்லூரிகளோடு இணைத்து தமிழ்க் கல்லூரிகளை பல்கலைக் கழக மானியக் குழு எண்ணுவதில்லை. அந்த வகையில் அதற்கான வசதிகளும் சலுகைகளும் அளிப்பதில்லை. எம்.ஏ.,பி. டி. படித்தவர்கள் உயர்நிலைப் பள்ளியில் இருந்தால், பணிக்கேற்ற சம்பளம்தான் பெறுவார்கள். எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் என்பதற்காக கல்லூரிச் சம்பளத்தைத் தருவதில்லை. அந்த வகையில் தான் எம். ஏ. படித்திருந்தாலும், கலைக்கல்லூரியில் இருப்பவர்களுக்கு அந்த விகிதத்தின் அடிப்படையில் தரப்படுகிறது. தமிழ்க் கல்லூரியில் அந்த விகிதத்தில் தரவேண்டிய நிலை இருக்கிறது.

புலவர் ஓ. அறிவுடை நம்பி : திருவையாற்றிலுள்ள இசைக் கல்லூரியிலிருக்கும் ஆசிரியருக்கு ரூ. 400 ஊதியம் தரப்படுகிறது. இயல் கல்லூரி ஆசிரியருக்கு இந்தவிதமான ஊதியம் தரப்படவில்லை. ஒரே அமைப்பின்கீழ் இருக்கின்ற இரண்டு கல்லூரிகளில், ஒரு கல்லூரிக்கு ஒரு விதமும், இன்னொரு கல்லூரிக்கு இன்னொரு விதமுமாக ஊதியம் வழங்கப்படுகிறது. இதை மாற்றுவதற்கும், இயற் பேராசிரியர்களுக்கும் ரூ. 400 ஊதியம் பரிவோடு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது ஆராயப்பட வேண்டிய ஒன்று. இரண்டு கல்லூரிகளும் ஒன்றல்ல என்று அவரே குறிப்பிட்டார். ஒன்று இசைக் கல்லூரி—மற்றொன்று தமிழ்க் கல்லூரி. அதற்கு என்ன விதிதங்கள் இருக்கின்றன என்று ஆராய வேண்டும். தனிக் கேள்வி போட்டால் ஆராய்ந்து சொல்லலாம்.